# <u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>

## O.S. No. 202/2014

Deposition of **D.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 10.07.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : மணிவேல் Father Name : பொன்னான்

துவக்க நேரம்: 04.05 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

1) இந்த தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி எனக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் ஆமாம். மேற்கண்ட அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றாலும் அந்த ஆவணம் பி.வா.த.சா.ஆ.8-ஆக குறியீடு செய்யப்பட்டது என்றாலும் சரிதான். மேற்படி அறிவிப்பில் வாதி மணி தாவா சொத்தில் வாடகைக்கு குடியிருந்தார் என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் தாவா சொத்து எனக்கு பாகப்பாத்தியமூலம் பாத்தியப்பட்டது என்ற விவரத்தையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால், நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் குறிப்பிட்டுள்ளேன்.

2) விடுதலைப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள வீட்டின் மின் இணைப்பு எண்.217 என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அசல் பாகபாத்திய விடுதலைப்பத்திரத்தில் சொத்து விவரத்தின் குறிப்பிட்டுள்ள சர்வே எண் திருத்தப்பட்டுள்ளது என்றாலும் அந்த ஆவணம் பொய்யான ஆவணம் என்றாலும் சரியல்ல.

3) நான் தற்பொழுது குடியிருந்துவரும் வீட்டின் கதவு எண்.5/19B என்றால் சரிதான். அது பழைய எண், தற்போதைய புதிய எண்.5/184 ஆகும். வா.த.சா.ஆ.6-ல் வாதி குடியிருந்து வரும் வீட்டின் மின் இணைப்பு எண்.1026 மற்றும் கதவு எண் 5/183 ஆகியவற்றை குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான்.

4) வாதி மணி எந்த தேதியிலிருந்து தாவா சொத்தில் வாடகைக்கு குடியிருந்து வருகிறார் என்ற விவரத்தை பதிலுரையிலோ, பதில் அறிவிப்பிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் தேதியை குறிப்பிட்டுள்ளேன். நான் பதிலுரையில் தேதியை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் தற்பொழுது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

5) வாதிக்கு வீட்டை வாடகைக்கு விட்டதாக சொல்லியுள்ள நிலையில் அதற்காக முன்பணம் எவ்வளவு வாங்கினேன் என்றால் அவ்வாறு முன்பணம் (Advance) எதுவும் வாங்கவில்லை. தாவா சொத்தின் வீட்டுவரி ரசீது, மின் இணைப்பு ஆகியவை வாதி பெயரில்தான் உள்ளது என்றால் நான் வாதிக்கு வீட்டை வாடகைக்கு விடுவதற்கு முன் தாவா வீட்டிற்கு என் பெயரில் உள்ள வீட்டுவரி ரசீது , மின் இணைப்பு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீது மற்றும் மின் இணைப்பு தாவா சொத்திற்குண்டானது அல்ல என்றாலும் கதவு எண்.5/184, மின் இணைப்பு எண்.217 ஆகியவற்றிக்கு உண்டானவை என்றாலும் சரியல்ல.

6) நான் எனது பதிலுரையில், வாதி தாக்கல் செய்துள்ள தாவாவின் சொத்து விவரம் கூறியுள்ளது தவறு என்றால் சரிதான். வாதி தாக்கல் செய்துள்ள சொத்திற்குதான் நான்

எதிரிடை பாத்தியம் கோரி எனது பதிலுரையில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் எதிரிடை பாத்தியத்தை எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள விடுதலைப்பத்திரத்தின் அடிப்படையில்தான் கோரியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விடுதலைப்பத்திரத்தின் அடிப்படையில் எதிரிடை பாத்தியம் கோர எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

7) எதிரிடை பாத்தியத்தில் சொத்து விவரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறு என்றாலும் நான் எந்த சொத்திற்கு எதிரிடை பாத்தியம் கோரியுள்ளேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிடை பாத்தியத்தில் வாதியிடமிருந்து வாடகை பாக்கியை கேட்டு எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல, கேட்டுள்ளேன். அவ்வாறு நான் வாடகை பாக்கியை பரிகாரமாக கேட்கவில்லை என்றாலும தற்பொழுது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

8) வாதி குடியிருந்து வரும் வீடு, எனது அப்பா காலத்திலேயே வாதியிடம் ஒப்படைக்கப்பட்டது என்பதால்தான் விடுதலைப்பத்திரத்தில் அந்த வீட்டைப்பற்றி குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. விடுதலைப்பத்திரம் ஏற்பட்ட பின்னர்தான் வாதியிடம் வீட்டை வாடகைக்கு விட்டேன். மேற்படி விடுதலைப்பத்திரம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் கடந்த 05.09.2013-ல் எழுதப்பட்டது. நான் வாதிக்கு விடுதலைப்த்திரத்திற்கு பின்னிட்டுதான் வீட்டை வாடகைக்கு விட்டேன் என்று முன்னுக்குபின் முரணாக சொல்கிறேன் என்றால் எனது பதிலுரையில் சரியாக சொல்லி உள்ளேன். நான் வழக்கறிஞர் அறிவிப்பிலும், பதிலுரையிலும், எனது சாட்சியத்திலும் சங்கதிகளை முன்னுக்குப்பின் முரணாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

9) தாவா சொத்து வாதிக்கு முழுமையாக பாத்தியப்பட்ட சொத்து என்றாலும் அதில் எனக்கு எந்த உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. வாதி தாவா சொத்தின் சுவாதீனத்தை என்னிடம் ஒப்படைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் சுவாதீனம் கோரும் உரிமையையே எனக்கு இல்லை என்றால் சரியல்ல.

10) வாதி தாவா சொத்தின் தென்புறத்தில் குடியிருந்து வருகிறாரா என்றால் ஆமாம். நான் வடபுறத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். வாதி தாவா சொத்தில் கடநத 20 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறாரா என்றால் ஆமாம. ஆனால், வாடகைக்குதான் குடியிருந்து வருகிறார். நான் சொல்வது தவறு என்றாலும் வாதி உரிமையாளர் என்ற முறையில்தான் தாவா சொத்தில் குடியிருந்து வருகிறார் என்றாலும் சரியல்ல. வாதி கோரியவாறு வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

முடிவு நேரம்: 04.46 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Additional District Munsif, Attur

Typed by Selvi. C. Sasikala - O.S. No.202/2014, Dt.10.07.2025.